**உஹன பிரதேச சபை**
**அம்பாறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கையும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையும் 2019 மே 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உஹன பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபை வளவில் நிர்மாணிக்கப்பட்ட 03 வாகன நிறுத்தும் இடத்தின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். இந்த வாகனங்கள் நிறுத்தி வைக்கும் நிலையத்தின் செலவினங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்க பவில்லை. எதிர்வரும் கணக்கு நடவடிக்கைகளின் போது சொத்தாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 322,920 தொகையான 03 கணனி இயந்திரங்களின் பெறுமதி ரூபா 280,800 ஆக மூலதனமாக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 03 நூலகங்களுக்குரிய பயன்பாட்டு பதிவேட்டின் படி கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் நன்கொடையாக கிடைத்த புத்தகங்களின் பெறுமதி ரூபா 149,780 தொகை ரூபா 110,803 ஆக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு எதிர்காலத்தில் சரி செய்யப்படும். |
| (iv) | மீளாய்வாண்டின் செப்தெம்பர் முதல் திசெம்பர் வரை கிடைக்க வேண்டிய முத்திரைக்கட்டண வருமானம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். கணக்குகள் தயாரிக்கும் வரை இந்த வருமானம் தொடர்பான தகவல்கள் கிடைத்திருக்கவில்லை. ஏதிர்வரும் கணக்குகளை தயாரிக்கும் போது அதனை அந்த வருமானத்தை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (v) | ஜகலதென்ன பன்சலயிற்கு முன்னாலுள்ள வீதியை கொங்ரீட் இடும் செயற்திட்டத்துக்காக செலுத்த வெண்டிய ரூபா 116,725 தொகைக்காக கணக்குகளில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (i) | பெறவேண்டிய கணக்குகள்<br>வாடகைக்கு வழங்கப்பட்ட 24 கடைகளில் இருந்து 2008 முதல் 2016 வரையான காலப்பகுதிக்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 221,933 தொகையான நிலுவைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டில் ஆரம்பப் பகுதியில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

(ii) செலுத்தவேண்டிய கணக்குகள்

| | | |
|---|---|---|
| முன்னைய ஆண்டுகளுக்குரிய தீர்க்கப்படாமல் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,209,459 தொகையான நானாவித வைப்புக் கணக்கை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். முன்னைய ஆண்டுகள் முதல் கொண்டு வரப்படுகின்ற பெறுமதியானமையால் பதிவேடுகளைப் பரிட்சித்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ரூபா 13,969,260 தொகையான 06 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 5,567,873 தொகையான 03 பொறுப்பு விடயங்கள் என்பவற்றின் ஏடுகள், பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதி கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். ஆண்டிற்கு ஆண்டு மேற்கூறப்பட்ட கணக்கு விடயங்களுக்கான பெறுமதி பெறப்பட்டிருந்த போதும் மீதி தொடர்பாக கொண்டு வரப்படுகின்ற பதிவேடு பேணப்படவில்லை. முன்னர் தயாரிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் ஏடுகளைப் பரிட்சித்து இந்தப் பதிவேட்டை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| (i) | 140 ஆம் பிரிவு | ஆதன வரி அறவிடுவதற்காக ஆதனங்களை கால ரீதியில் மதிப்பீடு செய்யாமல் 2007 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போதும் ஆதன வரி அறவிடப்பட்டிருந்தது. | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம் மதிப்பீட்டைச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 152 ஆம் பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 03 தொலைபேசி கம்பனிகளில் இருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 39,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 8(ஏ)(1) ஆம் பிரிவு | சட்டரீதியான விடயங்கள் மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கிய அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம் |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதி | | | |
| (i) | விதி 59 | மீளாய்வாண்டில் ஆரம்பத்தின் போது பிரதேசத்தில் மைமையாய்வொன்று நடாத்தப்பட்டு கைத்தொழில்களுக்குரிய வரியை அறவிட வேண்டிய நிறுவனங்கள் இனங்காணப்பட்டு அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இனங்காணப்பட்டுள்ள கைத்தொழில் வரியை அறவிட வேண்டிய நிறுவனங்கள் காணப்படவில்லை. இது தொடர்பாக மேலும் வருமான பரிசோதகர்களுக்கு அறிவிக்கப்பட்டு மெய்மையாய்வு அறிக்கை பெறப்பட்டு நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | விதி 217 | ரூபா 62,656,258 தொகையான சகல காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பீ.அஸ் 46 படிவத்தின் பிரகாரம் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 104(4) | சபைக்கு சொந்தமான கெப் வண்டியொன்று 2017 ஆம் ஆண்டின் போது விபத்துக்கு உட்பட்டமை தொடர்பாக 03 மாதங்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம் |
| (ii) | நிதிப்பிரமாணம் 110 | இழப்பு மற்றும் நட்டப் பதிவேடு பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை. | இழப்பு மற்றும் நட்டப் பதிவேடு பேணிச்செல்லபட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம் தற்போது தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | 10 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்கு எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படவில்லை. | எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றோம் பல தடவைகள் மோட்டார் வாகன பரிசோதகருக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் செய்யப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனி மற்றும் ரூபா 1,325,437 பெறுமதியான உப பாகங்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | கணனி மற்றும் கணனி துணைப்பாகங்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய பதிவேடொன்று பேணிச்செல்லப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றோம் எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது இந்தக் கணனி துணைப் பாகங்கள் பொருட்பதிவேடுகளுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. |
| (எ) | ஏனைய சுற்றறிக்கை | | | |
| (i) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1988 மே 17 ஆம் திகதிய 22 ஆம் இலக்க சுற்றறிக்கை | அதிகாரப் பிரதேசத்தில் உள்ள சகல அசைவுறாத ஆதனங்களும் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம் சபைக்குச் சொந்தமான ஆதனங்கள் எதிர்காலத்தில் மதிப்பீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 46 ஆம் இலக்க சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான வாடகைக்கு வழங்கப்பட்ட உஹன 24 கடைகளின் வாடகை 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம் எதிர்காலத்தில் மதிப்பீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,335,440 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,024,652 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,944,785 | 1,641,072 | 1,185,513 | 3,876,744 | 1,069,876 | 1,044,785 | 1,043,573 | 3,414,214 |
| (ii) | வாடகை | 5,830,736 | 5,283,934 | 5,376,956 | 221,933 | 1,057,748 | 989,978 | 936,941 | 298,781 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 830,000 | 744,165 | 744,165 | | 250,000 | 480,650 | 480,650 | |
| (iv) | ஏனைய வருமானம் | 4,340,000 | 4,457,749 | 5,311,435 | 2,326,151 | 3,975,000 | 2,683,967 | 3,690,216 | 2,674,037 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உபவிதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | உபவிதி விதிக்கப்படாதிருந்த விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். உபவிதி விதிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் ஆண்டில் செயல்நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிக்கப்படும். |

(இ) கைவிடப்பட்ட இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| உஹன புதிய வாராந்த சந்தை வளவில் நிர்மாணித்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 1,838,188 செலவில் அத்திவாரம் மாத்திரம் அமைக்கப்பட்டிருந்ததுடன் வேலை ஆரம்பிக்கப்படவில்லை. | வாராந்த சந்தை வளவை பயன்படுத்தக் கூடிய வகையில் அமைக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மண் நிரப்பி இந்த உஹன புதிய வாராந்த சந்தையை நடாத்தி பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

(ஈ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| கூட்டுப்பசளை தளமொன்றை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தப் பெறுமதியில் 20 சதவீதம் அதாவது ரூபா 1,314,000 தொகை முற்பணமாக ஒப்பந்தகாரருக்கு 2016 பெப்ரவரி 18 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. காணியின் உரித்து தீர்க்கப்படாமையினால் இந்த செயற்திட்டத்தை ஆரம்பித்தல் தொடர்ச்சியாக தாமதமாக காணப்பட்டதுடன் அதன் காரணமாக கழிவுப் பொருட்களை சேகரிக்கின்ற டெக்டர் நாளொன்றுக்கு 20 கிலோமீட்டருக்கு அதிகமாக ஓட வேண்டி ஏற்பட்டிருந்தது. மேலும் 2016 ஆம் ஆண்டு முதல் 2018 திசெம்பர் வரை அம்பாறை நகர சபைக்கு கழிவுப் பொருட்களை கொண்டு செல்வதற்காக ரூபா 364,800 தொகை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | பொருத்தமான இடமொன்றை தெரிவு செய்து கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகளின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030’’ தொடர்பாக அறிந்திருந்த போதிலும் அதற்குரிய நோக்கம் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டு ஸ்தாபிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| (அ) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்ட 61 கட்டிட திட்ட விண்ணப்பங்களுக்கு இடையில் 56 கட்டிட திட்ட | தரச் சான்றிதழ் விநியோகிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் தரச் சான்றிதழை விநியோகிப்பதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | விண்ணப்பங்களுக்காக தரச்சான்றிதழ் விநியோகப்பட்டிருக்கவில்லை. | | எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 1597 ஆம் இலக்க 2009 ஏப்ரல் 17 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரத்தில் தரச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாத கட்டிடமொன்றில் குடியிருக்கும் அல்லது பயன்படுத்துகின்ற அல்லது பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற கட்டிடத்திற்காக நாளொன்றுக்கு ரூபா 50 வீதம் தண்டப்பணம் அறவிட்டு தரச்சான்றிதழ் விநியோகிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | வர்த்தமானிப் பத்திரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (இ) | 2007 ஆம் ஆண்டின் போது கட்டிடத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு கட்டிடமொன்று 2015 யூன் மாதம் முதல் 2018 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக வியாபார அனுமதிப் பத்திரம் பெற்று முன்னர் தனியார் தங்குமிடமொன்று நடாத்தி செல்லப்பட்டிருந்த போதும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 63,900 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | தனியார் தங்குமிடத்தில் இருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 63,900 தொகை அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 1986 மார்ச் 10 ஆம் திகதிய 392/9 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானிப் பத்திரம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1985 மார்ச் 20 ஆம் திகதிய 08/01/38 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட 15 | அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப் பட்டிருக்கின்ற 15 அனுமதியற்ற நிர்மாணங்கள் வர்த்தமானியின் பிரகாரம் அறவிட வேண்டிய ரூபா 120,236 தொகை | இது தொடர்பாக எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் |

| | | |
|---|---|---|
| நிர்மாணங்கள் தொடர்பாக திட்டமிடல் குழு அங்கீகாரம் வழங்காதிருந்ததுடன் வர்த்தமானியின் பிரகாரம் அறவிட வேண்டிய ரூபா 120,236 தொகை அறவிடப்பட்டு மேவுகை அங்கீகாரத்தை வழங்குவதற்கோ அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 28 ஆவது பிரிவின் பிரகாரம் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ அல்லது ஏனைய நடவடிக்கைகளை எடுப்பதற்கோ சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட்டு மேவுகை அங்கீகாரம் வழங்குவதற்கு அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 28 ஆவது பிரிவின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ வேறு நடவடிக்கைகளோ எடுக்கப்பட வேண்டும். | |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவி அணியினரில் 09 பதவிகளுக்காக 16 வெற்றிடங்களும் 02 பதவிகளில் 02 மிகையும் காணப்பட்டன. | புதவி அணியினரின் வெற்றிடங்கள் நிரப்பபட வேண்டியிருந்ததுடன் மிகைக்காக தேவையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | இடம்மாற்றலாகிச் சென்ற 13 உத்தியோகத்தர்களிடமிருந்தும் ஓய்வு பெற்று சென்ற ஊழியரிடமிருந்தும் அறவிட வேண்டிய ரூபா 94,712 தொகையான ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அறவிடப்படாமல் காணப்படுகின்ற ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். ஊழியர் கடனை அறவிடுவதற்கு உரியவருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் இருந்து 2001 முதல் 2013 வரையான காலப்பகுதியில் சபைக்கு கிடைத்த 09 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மற்றும் 63 காணிக்கூறுகள் என்பவற்றின் உரித்தை சபைக்கு கையேற்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்களினதும் இயந்திர உபகரணங்களினதும் சட்டரீதியான உரித்து கையேற்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் கையேற்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

#### 3.4.2 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டில் சபையை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சபை அதிகாரப் பிரதேசத்தில் 05 மயான நிலங்களில் காடுகள் வளர்ந்திருந்ததால் வேலிகள் அமைத்து பூங்காவாக அமைக்கும் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 180,283 செலவினமொன்றில் அமைக்கப்பட்ட 192 கொங்ரீட் தூண்கள் உரிய பணிகளில் ஈடுபடுத்தப்படாமல் சபை வளவில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. | 192 கொங்ரீட் தூண்களும் உரிய பணிகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். இது தொடர்பாக உரிய நலன்புரிச் சங்கங்களுக்கு அறிவிக்கப்பட்ட போதும் கொங்ரீட் தூண்கள் எடுத்துச்செல்லப்பட்டிருக் கவில்லை. இது தொடர்பாக மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது. |

#### 3.4.3 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 1994 முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலத்தில் சபைக்கு கிடைத்த 10 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை பதிவு செய்வதற்கு தேவையான | வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை பதிவுசெய்வதற் | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 10 வாகனங்களின் வருமான அனுமத்திப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்காமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | வாகனங்களின் வருமான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கபட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (இ) | சபைக்கு சொந்தமான ரூபா 1,500,000 பெறுமதியான 02 டெக்டர் வண்டிகள் காப்புறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களை காப்புறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கபட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

## 3.6 பெறுகை

### 3.6.1 பெறுகைத் திட்டம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் வருடங்களில் பெறுகை திட்டம் தயாரிக்கப்படும். |